# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 6 | வயதுப்பிரிவுக்கு: | ஆத்திசூடி |
| 7-8 | வயதுப்பிரிவுக்கு: | ஆத்திசூடி |
| 9-10 | வயதுப்பிரிவுக்கு: | கொன்றைவேந்தன் |
| 11-12 | வயதுப்பிரிவுக்கு: | நறுந்தொகை |
| 13-14 | வயதுப்பிரிவுக்கு: | திருக்குறள்: நடுவு நிலைமை |
| 15-16 | வயதுப்பிரிவுக்கு: | திருக்குறள்: அடக்கமுடைமை |
| 17-18 | வயதுப்பிரிவுக்கு: | திருக்குறள்: புகழ் |

# ஆத்திசூடி

(வயதுப்பிரிவு 6)

1. அறஞ் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு

# ஆத்திசூடி

(வயதுப்பிரிவு 7 – 8)

1. **அறஞ் செய விரும்பு**
   நற்காரியங்களைச் செய்வதற்கு ஆசைப்பட வேண்டும்.

2. **ஆறுவது சினம்**
   கோபத்தைத் தணியச் செய்ய வேண்டும்.

3. **இயல்வது கரவேல்**
   இயன்றதை ஒளிக்காமல் செய்ய வேண்டும்.

4. **ஈவது விலக்கேல்**
   பிறருக்கு உதவி செய்வதைத் தடுக்கக் கூடாது.

5. **உடையது விளம்பேல்**
   உன்னிடம் இருக்கும் மறைக்க வேண்டியுள்ள இரகசியத்தை பிறரிடம் சொல்லாதே.

6. **ஊக்கமது கைவிடேல்**
   செயலில் ஈடுபடும் பொழுது தடங்கல் ஏற்படுமானால் அதைக் கண்டு தைரியத்தை கைவிடக் கூடாது.

7. **எண் எழுத்து இகழேல்**
   கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்கக் கூடாது.

8. **ஏற்பது இகழ்ச்சி**
   பிறரிடம் போய் பிச்சையெடுப்பது இழிவான செயலாகும்.

9. **ஐயம் இட்டு உண்**
   பிச்சை கேட்பவர்க்கு உணவு கொடுத்த பின்னர் சாப்பிட வேண்டும்.

10. **ஒப்புரவு ஒழுகு**
    உலக அனுபவத்தை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்

# கொன்றைவேந்தன்

(வயதுப்பிரிவு 9 – 10)

1. **எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்**
   ⇨ *கணக்கும் இலக்கியமும் கண்களைப் போல சிறப்பானவை.*

2. **குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை**
   ⇨ *குற்றம் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்தால் சுற்றத்தார் என யாருமே இருக்கமாட்டார்.*

3. **கைப் பொருள் தன்னில் மெய்ப் பொருள் கல்வி**
   ⇨ *கைவசம் இருக்கும் செல்வத்தைக் காட்டிலும் கல்வியே நிரந்தரமான உண்மையான செல்வமாகும்.*

4. **சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு**
   ⇨ *தன்னுடைய பிள்ளைகளை உலகத்தார் அறிஞர் என்று போற்றுவதே தாய்க்குச் சிறப்பாகும்.*

5. **தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை**
   ⇨ *தகப்பனார் கூறும் அறிவுரைக்கு மிஞ்சிய சாத்திரம் வேறு இல்லை.*

6. **தாயிற் சிறந்து ஒரு கோயிலும் இல்லை**
   ⇨ *தாயையே வணங்க வேண்டும். அதற்கு மேலான கோயில் எதுவுமே இல்லை.*

7. **திரை கடல் ஓடியும் திரவியம் தேடு**
   ⇨ *அலைகடலுக்கு அப்பால் சென்றாவது பொருள் தேட வேண்டும்.*

8. **தோழனோடும் ஏழைமை பேசேல்**
   ⇨ *நெருங்கிய நண்பனிடத்திலும் கூட வறுமை நிலையைச் சொன்னால் மிகவும் கேவலமாக நினைப்பான்.*

9. **நல் இணக்கம் அல்லது அல்லல் படுத்தும்**
   ⇨ *நல்லவர்கள் தொடர்பு நன்மையாகும். கெட்டவர்கள் தொடர்பு தீமையாகும்.*

**10.** **நாடு எங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை**

⇨ *தேசம் பூராவும் செழித்துத் தழைத்தால் துன்பமே இல்லை.*

**11.** **நிற்கக் கற்றல் சொல் திறம்பாவை**

⇨ *நிலையான கல்வி கற்றவர் என்பவர் வாக்குறுதி உள்ளவரே ஆவர்.*

**12.** **நுண்ணிய கருமமும் எண்ணித் துணி**

⇨ *மிகச் சிறிய செயலானாலும்கூட தீர யோசித்தே செய்யவேண்டும்.*

**13.** **பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்**

⇨ *பாலினால் தயாரித்த உணவுப் பொருளானாலும் நேரம் தவறி சாப்பிடக் கூடாது.*

**14.** **பையச் சென்றால் வையம் தாங்கும்**

⇨ *மெதுவாகச் செய்யக் கூடிய செயல் வெற்றி அளிக்கும்.*

**15.** **முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்**

⇨ *முன் பகுதியில் யாருக்கேனும் தீங்கு செய்திடில் பிற்பகுதியில் தனக்கே தீங்கு நேரிடும்.*

**16.** **மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்**

⇨ *அறிவு சான்ற பெரியோர்கள் சொல்லும் அனுபவ மொழிகள் அமிர்தம் போன்றவை ஆகும்.*

**17.** **உரவோர் என்கை இரவாது இருத்தல்**

⇨ *அறிஞர் எனக் கூறப்படுவோர் எவரிடமும் சென்று யாசியாமல் இருப்பதே சிறப்பு.*

**18.** **ஊக்கம் உடைமை ஆக்கத்துக்கு அழகு**

⇨ *மனம் தளராமல் உறுதியோடு இருப்பது செழிப்புக்கு உயர்வாகும்.*

**19.** **வைகல் தோறும் தெய்வம் தொழு**

⇨ *நாள் தோறும் கடவுளை வணங்குதல் நன்மை தரும்.*

**20.** **ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்**

⇨ *நீதி நூல்களைப் படிக்காதவர்களுக்கு நல்லொழுக்க அறிவு இருக்காது.*

# நறுந்தொகை

(வயதுப்பிரிவு 11 – 12)

1. **எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்**
   ⇨ *எழுத்துக்களை, கல்வியை முதலில் கற்றுத் தந்தவர் தெய்வத் தன்மையானவர்.*

2. **கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்**
   ⇨ *கல்வி கற்றதற்குச் சிறப்பு, குற்றம் இல்லாமல் தெளிவாகப் பேசுதல் ஆகும்.*

3. **செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்**
   ⇨ *பணக்காரர்களுக்குச் சிறப்பு, தங்கள் உறவினர் துன்புறும்போது தகுந்த உதவி அளித்து ஆதரிப்பது.*

4. **மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை**
   ⇨ *அரசர்க்குச் சிறப்பு, நீதி வழுவாமல் ஆட்சி புரிவது.*

5. **வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல்**
   ⇨ *வியாபாரிக்குச் சிறப்பு, நேர்மையாகப் பொருள் சம்பாதிப்பது.*

6. **உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்**
   ⇨ *உணவுக்குச் சிறப்பு, விருந்தாளிகளுடன் அமர்ந்து உண்பது.*

7. **அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல்**
   ⇨ *அறிவாளிகளுக்குச் சிறப்பு கற்று அறிந்து, அடக்கமாக இருப்பது.*

8. **வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை**
   ⇨ *தரித்திர நிலைமையில் இருந்த போதிலும் அப்பொழுது நேர்மையோடு இருப்பது சிறப்பாகும்.*

9. **அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது**
   ⇨ *சந்தனக் கட்டையை எவ்வளவு அரைத்தாலும் அதன் மணம் குறையாது.*

10. **கலக்கினும் தண் கடல் சேறு ஆகாது**
    ⇨ *சமுத்திரத்தை எவ்வளவு கலக்கினாலும் சேறு ஆகாமல் தெளிவாக இருக்கும்.*

11. சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியோர் ஆயின் பொறுப்பது கடனே

⇨ *சிறுவர்கள் அறியாமல் செய்த தவறுகளை எல்லாம் பெரியவர்கள் பொறுத்துக் கொள்வது கடமை ஆகும்.*

12. நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே

⇨ *முரடர்களோடு நூறு ஆண்டுகள் பழகினாலும், அந்தப் பழக்கமானது நீரிலுள்ள பாசிபோல் காணப்படுமே ஒழிய, வேர் கொள்ளாது.*

13. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே

⇨ *பெரியார்களுடன் ஒருநாள் பழகிய போதிலும் அந்தப் பழக்கமானது பூமிக்குள் வேர் விடுவது போன்றது ஆகும்.*

14. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

⇨ *கல்வி பயில்வது நன்மையே தரும். பிச்சை எடுக்க நேரிட்டாலும் கல்வி கற்பது நன்மையே அளிக்கும்.*

15. அறிவுடை ஒருவனை அரசும் விரும்பும்

⇨ *அறிவுடையோரை அரசும் விரும்பும் மதிக்கும்.*

16. அச்சமும் நாணமும் அறிவு இல்லோர்க்கு இல்லை

⇨ *அறிவு இல்லாதவர்கள் தீமையைக் கண்டு பயப்படமாட்டார்கள். பழியைக் கண்டு நாணமாட்டார்கள்.*

17. கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை

⇨ *கெட்டுப் போனவர்களுக்கு, நண்பர்களோ சுற்றத்தார்களோ இல்லை.*

18. உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா

⇨ *செல்வமும் வறுமையும் ஒரு இடத்திலே நிற்பது இல்லை.*

19. இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே

⇨ *வசதி உடையோர் யாசிப்பவர்க்கு கொடுப்பதும் கடமையே.*

20. தறுகண் யானை தான் பெரிது ஆயினும்
சிறுகண் மூங்கில் கோலுக்கு அஞ்சுமே

⇨ *வீரம் மிக்க யானை பெரிதாக இருந்தாலும் சிறு கணுக்களுடைய மூங்கில் கோலுக்குப் பயப்படும்.*

# திருக்குறள்

(வயதுப்பிரிவு 13 – 14)

## நடுவு நிலைமை

111
**தகுதி எனவொன்று நன்றே பகுதியால்**
**பாற்பட்டு ஒழுகப் பெறின்.**

*பகைவர், நண்பர், அயலார் என்னும் வேறுபாடின்றி எல்லோரிடத்தும் முறைமை தவறாது நடந்தால் அந் நடுவுநிலைமை என்னும் ஓர் அறமே நன்மையைத் தரும்.*

112
**செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி**
**எச்சத்திற் கேமாப்பு உடைத்து.**

*நடுவுநிலை உடையவனுடைய செல்வம் மற்றவர் செல்வம்போல் அழிந்து போகாமல், அவனது சந்ததிக்கும் உதவக் கூடியதாகும்.*

113
**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல்.**

*தீமையைத்தராது நன்மையே தருவதானாலும் நடு நிலை தவறுவதால் உண்டாகின்ற செல்வத்தை அப்பொழுதே கைவிட வேண்டும்.*

114
**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப் படும்.**

*ஒருவர் நடுவுநிலையுள்ளவர் அல்லது இல்லாதவர் என்பதை, அவருக்குப்பின் நிற்கும் புகழாலும் பழியாலும் அறியலாம்.*

115
**கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க் கணி.**

*தாழ்வும், உயர்வும் ஒருவர் வாழ்வில் இல்லாதவை அல்ல. அவரவர் வினைகளால் வரும் என்பதை*

*அறிந்து, நடுவுநிலை தவறாதிருத்தல் அறிவால் நிறைந்தவர்க்கு அழகாகும்.*

116

**கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்**
**நடுவுஒரீஇ அல்ல செயின்.**

*ஒருவன் மனம் நடுவுநிலையிலிருந்து நீங்கி, முறை யல்லாதவற்றைச் செய்ய நினைத்தால், 'நான்கெட்டு விடுவேன்' என்பதை அறிவானாக.*

117

**கெடுவாக வையாது உலகம் நடுவாக**
**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.**

*நடுவுநிலைமை தவறாத அறநெறியை மேற்கொண் டொழுகும் ஒருவன் அடையும் வறுமையை, அறிவுடை யோர் தாழ்வாகக் கருதமாட்டார்.*

118

**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி.**

*முன் சமமாக நின்று, பின் தன்னிடத்தில் வைக்கப் பட்ட பொருளின் அளவைக் காட்டும் துலாக்கோல் போல, நடுவு நிலைமையிலிருந்து தவறாதிருத்தல் அறிவுடையோர்க்கு அழகாகும்.*

119

**சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா**
**உட்கோட்டம் இன்மை பெறின்.**

*நடுவுநிலையாவது ஒருவனது சொல்லில் குற்றம் இல்லாதிருத்தல். அவனது உள்ளம் நடுவு நிலைமையில் இருக்குமானால், சொல்லில் குற்றம் இல்லாத நிலைமை உண்டாகும்.*

120

**வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோற் செயின்.**

*பிறர் பொருளையும் தம் பொருள் போலப் பாதுகாத்து வாணிகம் செய்பவர்க்கு வாணிகம் வளரும்.*

# திருக்குறள்

(வயதுப்பிரிவு 15 – 16)

## அடக்கமுடைமை

121
**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.**

*அடக்கம் என்னும் பண்பு ஒருவனைத் தேவர் நடுவே*
*கொண்டு சேர்க்கும்; அடங்காமை என்னும் குணம்*
*நரகத்தில் தள்ளிவிடும்.*

122
**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூஉங் கில்லை உயிர்க்கு.**

*அடக்கம் என்ற குணத்தை உறுதிப் பொருளாகக்*
*கொண்டு காப்பாற்ற வேண்டும். ஏனென்றால் அந்த*
*அடக்கத்தை விடச் சிறந்த செல்வம் உயிர்க்கு இல்லை.*

123
**செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து**
**ஆற்றின் அடங்கப் பெறின்.**

*அறிய வேண்டியவற்றை அறிந்து ஒருவன் அடங்கி*
*நடந்தால், அவ்வடக்கம் பிறரால் மதிக்கப்பட்டு,*
*அவனுக்குச் சிறப்பைத் தரும்.*

124
**நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது**

*இல்லற ஒழுக்கத்தில் மாறுபடாமல் நின்று அடங்கி*
*யிருப்பவனின் பெருமை, மலையை விட மிகப் பெரியதாகும்.*

125
**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
**செல்வர்க்கே செல்வந் தகைத்து.**

*அடங்கி நடத்தல் எல்லோருக்கும் நல்லதாகும்; அவ்*
*வெல்லாருள்ளும் செல்வர்க்கே அது மற்றொரு*
*செல்வமாகும் சிறப்பினையுடையது.*

126

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.**

*ஆமை தன் உறுப்புகளை உள்ளே இழுப்பதுபோல ஒருவன் ஒரு பிறப்பில் ஐம்பொறிகளையும் அடக்குவானெனில் அஃது அவனை அடுத்த ஏழு பிறப்புகளிலும் தீமையிலிருந்து பாதுகாக்கும்.*

127

**யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

*ஒருவர் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவைக் காத்தல் வேண்டும்; அவ்வாறு காக்கவில்லையென் றால் குற்றமான சொற்களைச் சொல்லித் தாமே துன்பம் அடைவர்.*

128

**ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.**

*தீய சொற்களின் பொருளால் விளையும் தீமையானது ஒருவனிடம் உண்டானால் அதனால் மற்ற அறங் களாலும் பயன் இல்லாது போகும்.*

129

**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.**

*நெருப்பினால் சுட்டபுண்ணால் உடம்பில் தழும்பு ஏற்பட்டாலும், மனத்தில் ஆறும். நாவினால் தீய சொல் சொல்லிச் சுட்ட தழும்பு மனத்திலே ஒருபோதும் ஆறாது.*

130

**கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.**

*மனத்தில் சினம் உண்டாகாமல் தடுத்துக் கற்க வேண் டியவற்றைக் கற்று அடக்கம் உடையவனாக இருப்பவ னிடம், அறக்கடவுள் சென்றடையும் சமயத்தை எதிர் பார்த்திருக்கும்.*

# திருக்குறள்

(வயதுப்பிரிவு 17 - 18)

## புகழ்

231
**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.**

*வறியவர்க்குக் கொடுத்தல் வேண்டும்; அதனால் புகழ் உண்டாகும் படி வாழ்தல் வேண்டும்; அப்புகழைத் தவிர மனித உயிர்க்கு வேறொரு பயன் இல்லை.*

232
**உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.**

*உலகத்தவர் சிறப்பாகப் பேசுவதெல்லாம் இரப்பவர்க்கு ஒன்றைக் கொடுப்பவர்க்கு உண்டாகும் புகழையேயாகும்.*

233
**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.**

*தனக்கு ஒப்பில்லாது உயர்ந்த புகழைத் தவிர, இவ்வுலகத்தில் அழியாமல் இருப்பது வேறொன்றுமில்லை.*

234
**நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.**

*இப்பூமியின் எல்லையளவுக்குப் பரவியிருக்கும் புகழ் தரும் செயல்களை ஒருவன் செய்வானானால், தேவருலகத்தவர் தேவரைப் போற்றாது அவனையே போற்றுவர்.*

235
**நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.**

*பொருளைக் கொடுத்துப் புகழைச் சம்பாதித்தலும், புகழ் உடம்பை நிறுத்திப் பூத உடம்பை விடுதலும் அறிவாற்றலுள்ளவர்க்கே முடியும்.*

236
**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று.**

*மனிதராகப் பிறந்தால் புகழ் தோன்றுவதற்குக் காரணமாகிய குணங்களோடு பிறக்கவேண்டும்; அக்குணங்களில்லாதவர் பிறவாதிருத்தல் நல்லது.*

237
**புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை**
**இகழ்வாரை நோவது எவன்.**

*புகழ் உண்டாகும்படி வாழாதவர், தம்மைப் பிறர் இகழ்ந்தால், அவ்விகழ்ச்சி தம் குறைபாட்டினால் வந்தது என்று தம்மை நொந்து கொள்ளாது, இகழ்ந்தவரை நொந்து கொள்வது ஏனோ?*

238
**வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்**
**எச்சம் பெறாஅ விடின்.**

*ஒருவர் புகழைப் பெறவில்லை என்றால், அதுவே இவ்வுலகத்தவர்க் கெல்லாம் பழியாகும் என்று கூறுவர்.*

239
**வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா**
**யாக்கை பொறுத்த நிலம்.**

*புகழ் இல்லாதவனின் உடம்பைச் சுமந்த நிலம், குற்றமற்ற பயனான விளைச்சல் இல்லாமல் குறைந்து விடும்.*

240
**வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர்.**

*தம்மிடம் பழி உண்டாகாமல் வாழ்பவரே உயிர் வாழ்பவராவர்; புகழின்றி வாழ்பவர் இறந்தவராவர்.*